தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 12-7-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**கரீப் பருவ மக்காச்சோளத்திற்கான விலை விவசாயிகளை மகிழ்விக்கும்**

இந்தியாவில், மக்காச்சோளம் மூன்றாவது முக்கிய தானியப் பயிராகும், விவசாயம் மற்றும் கூட்டுறவுத்துறையின் மூன்றாவது முன்கூட்டிய மதிப்பீட்டின் படி, 2015-16 ஆம் ஆண்டு மக்காச்சோளம் 84.9 இலட்சம் எக்டரில் பயிரிடப்பட்டு 210.2 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மக்காச்சோளம் மொத்த உற்பத்தியில் கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா, பீகார், மகாராஷ்டிரா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் சேர்ந்து 62 சதவிகிதம் பங்களிக்கிறது. தமிழ்நாட்டில் 2014-15 ஆம் ஆண்டில் மக்காச்சோளம் 3.39 இலட்சம் எக்டரில் பயிரிடப்பட்டு 18.19 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. திருப்பூர், அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, திண்டுக்கல், தேனி, தூத்துக்குடி மற்றும் சேலம் ஆகியவை மக்காச்சோளம் பயிரிடும் முக்கிய மாவட்டங்களாகும்.

அமெரிக்க ஐக்கிய வேளாண் துறை (USDA) தகவலின் படி, 2016 ஆம் ஆண்டு இருப்பு மற்றும் உள்நாட்டு நுகர்வு முறையே 8 இலட்சம் டன்கள் மற்றும் 222 இலட்சம் டன்களாகும். இந்தியா பாரம்பரியமாக தென்கிழக்கு நாடுகளுக்கு மக்காச்சோளம் ஏற்றுமதி செய்யும் முக்கிய நாடாகும். ஆனால் கதிர்களின் குறைந்த தானிய செறிவு, வறட்சி மற்றும் வெப்ப சலனம் போன்ற காரணங்களால் உள்நாட்டு உற்பத்தி குறைந்துள்ளதால் இந்தியா 2.5 இலட்சம் டன்கள் உக்ரைனிலிருந்து இறக்குமதி செய்துள்ளது. மேலும் தற்போதைய பருவத்தின் பற்றாக்குறையை சமாளிக்க மற்றொரு 5 இலட்சம் டன் மக்காச்சோளத்தை இறக்குமதி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாட்டின் மக்காச்சோள உற்பத்தி உள்நாட்டு தேவைகளில் 50 சதவிகிதம் மட்டுமே பூர்த்தி செய்கிறது. மக்காச்சோளம் அதிக உற்பத்தி செய்யும் மாநிலங்களிருந்து

வரும் வரத்து மீதித் தேவையை நிறைவு செய்கிறது. வர்த்தக மூலங்களின் படி, இந்த பருவத்தில் பீகார் மற்றும் ஆந்திராவிலிருந்து எந்த வரத்தும் இல்லையென்றும், எதிர்கால தேவைக்காக, வர்த்தகங்கள் மற்றும் கோழி நிறுவனங்கள் சிறிதளவு மக்காச்சோளம் கையிருப்பு வைத்துள்ளதாகவும் கூறப்படுகிறது. தமிழ்நாட்டில், 30-35 சதவிகிதம் சாகுபடிபரப்பு இப்பருவத்தில் அதிகரிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சூழலில், விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்க ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண் மற்றும் ஊரகமேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி வரும் விலை முன்னறிவிப்புத் திட்டம், கடந்த 13 ஆண்டுகளாக உடுமலைப்பேட்டை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நிலவிய மக்காச்சோளம் விலை மற்றும் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வு முடிவின் அடிப்படையில் அறுவடையின் போது பண்ணை விலை குவின்டாலுக்கு ரூ.1600/-முதல் ரூ.1700/-வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரகமேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண்: 0422-2431405

<u>தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
சிறுதானியங்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண்: 0422-2450507

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்